அறிவுநெறி; அறநெறி, அருள்நெறியே குறள்நெறி

# குறள்மலர்

மாலை-1 • மலர்-12

# திருக்குறள்

அறத்துப்பால்.

## 12

இல்லற இயல்.

## நடுவு நிலைமை.

உரிகம் அஞ்சல்.

கோலார் தங்கவயல்-2.
(மைசூர் மாநிலம்)

ஆசிரியர்; திருக்குறள்மணி; நாவலர்; அ. இரத்தினசபாபதி

# குறள் மலர்

## சிறப்பாசிரியர் குழு.

1. டாக்டர், சேவியர் தனிநாயக அடிகளார்,
எம். ஏ., எம். லிட். பிஎச். டி.
தலைவர்; இந்தியத்துறை: மலாயாப் பல்கலைக் கழகம்.
கோலாலம்பூர்: மலேசியா.

2. டாக்டர், மா. இராசமாணிக்கனார்,
எம். ஏ; எல். டி. எம். ஓ எல். பிஎச் டி.
தமிழ் ஆராய்ச்சித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
சென்னை

3. டாக்டர், மெ. சுந்தரம், எம். ஏ. எம். லிட். பிஎச். டி.
தமிழ்த்துறை; மதுரைப் பல்கலைக் கழகம். மதுரை.

4. டாக்டர், வி. ஐ. சுப்பிரமணியம், எம். ஏ. பிஎச். டி.
தமிழ்த்துறைத் தலைவர்; கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

5. முத்தமிழ்க்காவலர்; கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,
திருச்சிராப்பள்ளி.

6. திருமதி, மேரி மாசில்லாமணி அம்மையார்,
எம். ஏ. எல். டி தமிழ்த்துறைத் தலைவர்;
மகளிர் கிறித்துவக்கல்லூரி. சென்னை.

7. திருமிகு, பண்டித, இராம, மீனாட்சிசுந்தரனார்
எம். ஏ. எம். ஈ. எஸ்,
'குறள் குடில்' கோயம்புத்தூர்

8. திருமிகு. சாலை இளந்திரையன், எம். ஏ; எம். லிட்.
தமிழ்த்துறை; தில்லிப் பல்கலைக் கழகம். தில்லி.

9. திருமிகு, நா. சுப்புரெட்டியார்,
எம். ஏ; பிஎஸ்ஸி. எல். டி.
தமிழ்த்துறைத் தலைவர்; வேங்கடேசுவரா பல்கலைக்கழகம்,
திருப்பதி.

10. திருமிகு. வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ. எஸ்.
தமிழ்த்துறை: முதல்நிலைக் கல்லூரி தங்கவயல்.

பொறுப்பாசிரியர்;

திருக்குறள்மணி, நாவலர், அ. இரத்தினசபாபதி,
'குறள் மலர்'-உரிகம் அஞ்சல்,
கோலார் தங்கவயல்-2. (மைசூர் மாநிலம்)

அதிகாரம்–12.

# நடுவு நிலைமை

மாலை-1 | பராபவ--மார்கழி | மலர்-12

1. தகுதி எனவொன்று நன்றே பகுதியான்
பாற்பட்டு ஒழுகப் பெறின். 111

2. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து. 112

3. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

4. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். 114

5. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 115

6 கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின். 116

7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

8. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 118

9. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 119

10. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம்பேணிப்
பிறவுந் தமபோற் செயின். 120

# நடுவு நிலைமை நல்லறம்.

இல்லறத்தார்க்கு இருக்க வேண்டிய முக்கியான பண்புகளில் ஒன்று 'நடுவு நிலைமை' என்பதாகும்.

'நடுவு நிலைமை'-என்பது, எல்லோர்க்கும் பொதுவாக நடக்கும் நேர்மைத் தன்மையாம். நீதி வழங்கல், பொதுத் தொண்டு புரிதல், கடமையாற்றல், அறநெறி நிற்றல் முதலியவற்றில், நண்பர்-பகைவர்-உறவினர்-அயலார் என்பவருள், எக்காரணத்தாலேனும ஒருவருக்கு ஒருவிதமாயும், மற்றொருவருக்கு மற்றொரு விதமாயும இல்லாமல், எல்லோர்க்கும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டியது மனிதனின் கடமை என வற்புறுத்துகிறது இவ்வதிகாரம.

மனித நீதிக்கிணங்க, எல்லோரும் மனித குலம்; எல்லோரும் இறைவனின் மக்கள்; எல்லோரிடமும இலங்குகிறான் ஈசன்; மக்களுக்குள் பக்கவாதம் ஓரவஞ்சகம் செய்யமாட்டார் பெற்றோர், இறைவனுக்கும் தம் மக்களிடை பக்கவாதம் கிடையாது; எல்லோருக்கும் சமநீதி வழங்குவதே அவன் தன்மை; அவன் கருத்துக்கிணங்க மனிதனும் 'இவர் நமக்கு வேண்டியவர், அவர் நமக்கு வேண்டாதவர்' என்று கருதி எதிலும் ஓரவஞ்சனையாக நடவாமல், எல்லோர்க்கும் பொதுவாக நடுவு நிலையில நின்று வாழவேண்டும். இறைவனின் நடுவு நிலைமைத் தன்மையையும் இங்கு நினைவுறுத்திக் கொள்வது மனிதன் நேர்மையைக் கடைப்பிடித்து ஒழுதவதற்குப் பெரிதும் உதவியாகும்.

'தெய்வபக்தி யுடையோம்,' என்று தம்மைக் கூறிக் கொள்வோரிற் பலரும், பல சூழ்நிலைகளுக்கிடையில் தம்நடுவு நிலைமை தவறிச் சாதக, பாதகமாக நடப்பதை நாம் கண்கூடாகக் காணவில்லையா? நடுவு நிலைமை தவறி நடப்போர் பெரிய பெரிய தான தருமங்களைச்செய்து தங்கள் தவறை மறைக்க முயலுவதையும், உலகம் கண்டுதானே இருக்கிறது? இவர்களைத் தன் 'அன்பர்' என்று, நடுவு நிலைமைவாதியான அவ்விறைவன் எவ்வாறு ஏற்பான்? இறைவன நடுவு நிலைமையினன்-'இவர் வேண்டியவர்; அவர் வேண்டாதவர்'-என்று வேறுபடுத்தி நோக்கும் தன்மை இறைவனிடமில்லை;

முதல் அதிகாரமாகிய 'கடவுள் வாழ்த்'தில் இறைவன் 'வேண்டுதல்-வேண்டாமை இல்லாதவன்' என்று வள்ளுவர் கூறியதற்கு விளக்கம் தருவதே போன்று;

'இறைவன், கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருள்பவன்; (தன்னைக்) காணார்க்கும் கண்டவர்க்கும் கண் அளிப்பவன்; வலியார்க்கும் எளியார்க்கும் வரம் அருள்பவன்; (தன்னை) மதியாதார்க்கும் பதிப்பவர்க்கும் மதி கொடுப்பவன்; நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுவு நிற்பவன்; எல்லார்க்கும் பொதுவில் நடம்ஆடுகின்றவன்' என்று, வடலூர் வள்ளலார் இறைவனை வாழ்த்துகிறார்.

இறைவனின் நடுவு நிலைமைக்கேற்ப, மனிதரும் தம் வாழ்வில் நடுவு நிலைமைத் தன்மையை-நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தால், இகத்திற்கு மட்டுமன்றிப் பரத்திற்கும் அவன் அருள் கிட்டும் என்பதையும் வலியுறுத்துகிறது, இவ்வதிகாரம்.

'இல்லறத்தார்க்கு நேர்மை அவசியம்' என்பதால், துறவறத்தார்க்கு அது தேவையில்லை· அவர்கள் நேர்மை தவறி நடக்கலாம் என்பது கருத்தல்ல. துறவுக்குப் பொருந்தாத வழியில் நடக்கும் போலித் துறவியரைத் துறவற இயல் பகுதியில் வெகுவன்மையாகக் கண்டிக்கிறார் வள்ளுவர். சாதாரணமாக, நேர்மை தவறி நடக்கத் தூண்டுகிற சூழ்நிலைகள் துறவிக்கு நேர்வதில்லை. ஆனால், இல்லறத்தாரின் நிலை வேறு; சூழ்நிலைகளும் வேறு. உலகில் அவர்கள் ஓயாது பல காரியங்களைச் செய்துகொண்டேயிருக்க வேண்டிய நிலை உள்ளது. தனக்கு இவர் வேண்டியவர், அவர் வேண்டாதவர் என்று கருதித் தனது நடுவு நிலைமைத் தன்மையினின்று பிறழ்ந்துவிடச் செய்யத்தக்க சூழ்நிலைகள் பல தோன்றும்; தன்னலம் குறுக்கிட்டு நேர்மையை மறைக்கும். அம்மாதிரியான சூழ்நிலைகளில் இல்லறத்தான் சற்றும் தவறிவிடக் கூடாதே என்கிற கவலை வள்ளுவருக்கும். ஆகையால், நடுவு நிலைமையின் உயர்வையும், அதைக் கை நழுவ விடுவதால் வரும் தாழ்வையும், பல கோணங்களிலிருந்து எடுத்துக் காட்டுகிறார்.

மனிதனின் மனப்போக்கை நன்கறிந்தவர் வள்ளுவர். தான் உண்டு உடுத்து வாழ்வதைக் காட்டிலும், தம மக்களின் சுகவாழ்வுக்கென்று பொருளீட்டுவோரே பலர். அதற்காக நடுவு நிலைமை தவறிக்கூட பெரும் பொருள் ஈட்டத் துணிவோரும் பலர், அதனால். 'அப்பனே! நேர்மையாக வாழ்ந்தாயானால், நீ தேடிய சொத்து பழியோடு கலவாமல், உன் மக்களுக்குப் போய்ச் சேரும; அப்படியல்லாது, நேர்மையற்ற வழி

யில் நீ பொருள் ஈட்டினுயானுல், அது பழிவாய்ப்பட்டுச் சிதறுண்டு போம்; உன் மக்களை அது போய்ச் சேராது' என்று எச்சரிக்கிருர். 'புத்திர பாசம்' கொண்டு நேர்மை தவறுவோரை அதே புத்திரபாசம் காட்டியே திருத்த முனையும் வள்ளுவரின் புத்தி கூர்மையைக் காண்கிருேம் இதில்.

உலகில் பெரும் பொருளீட்டும் வாய்ப்புப் பெற்றேர் வாணிகம் மேற்கொள்பவர்களே. மற்றையோர் வருவாய், குறிப்பிட்ட அளவிலேயே இருக்கும். ஆதலின், வாணிகம் செய்வோர் நேர்மை வழி நடந்தால், நடுவு நிலைமை பிறழ்தல் என்னும் கேடு உலகில் வெகுவாகக் குறைந்து போம். எனவே, வியாபாரிக்கு நேர்மை முக்கியம்; இந்தச்சரக்கு உனனிடம் இருந்தால்தான் உன் வியாபாரம் செழிக்கும்; நேர்மை யென்னும் சரக்கு உன்னிடமில்லையானுல் உன் வியாபாரம உருப்படாது' என்கிருர்.

'வாணிகம்'-என்றவுடனேயே 'துலாக்கோல்' எல்லோர் நினைவிலும் எழுகிறது. அதனை மறககவில்லை வள்ளுவரும்! மேலும் நடுவு நிலைமைக்கு, மிகவும் பொருந்திய எடுத்துக்காட்டு துலாக்கோலே. இவ்வதிகாரத்தின் எட்டாவது குறளில் 'சீர்தூக்கும் தூலாக் கோல்' (தராசு) போல் நடுவு நிலையையுடன நடப்பது அறிவுடையார்க்கு அழகாகும என்று கூறவந்த குறளாசான், 'சீர்தூக்கும் கோல்போல்' என்று மட்டும் கூறி அமைந்தாரில்லை. 'சமன் செய்து,' என்று முதலில் துலாக்கோலின் ஒழுங்கை வலியுறுத்துகிருர். ஒழுங்கற்ற துலாக்கோலைக்கொண்டு மக்களை வஞ்சிப்போர் வள்ளுவர் காலத்திலும் இருந்திருக்கிருர்கள்! தன் அளவிலே, எப்போதுமே இருபுறமும் சமமாக இருக்கத்தக்கதாக துலாக்கோல அமைந்திருப்பதே ஒழுங்கு. இதனை 'சமன செய்து' என்று முதலில் குறித்தார். அதுபோலறு, மனிதன தன்னைச் சமன செய்யும் துலாக்கோல் போல் முதலில் அமைத்துக்கொண்டு, அதன்பின், சரியான துலாக்கோல் சரியான நிறை காட்டுவது போன்று. எல்லாக் காரியங்களிலும் நேர்மையுடன் நடந்துகொள்ளவும் வேண்டும்.

இத்துலாக்கோல் உவமை இகத்திற்கு மட்டுமன்றிப் பரத்திற்கும் அமைந்ததாகக் கொள்ளவும் இடமுணடு-இறைவன் நடுநிலை நிற்பவன. துலாக்கோலின் மேற்பக்கம் கீழ்நோக்கி அமைந்துள்ள சிறியமுள் அசைவதில்லை; கீழ்ப்புறமுள்ள பெரியமுள்ளே நிறைக்கேற்ப அப்பக்கமும் இப்பக்கமும் அசைகிறது. இருபக்கத்து நிறையும் சமனுகுங்கால், கீழ்முள் எப்பக்கமும் சாயாது, நேராக மேல் முள்ளை நோக்கி நிலைத்து நிற்கிறது. இதனை. மேல் 'பரமாத்மன்' என்றும், கீழ்முள் 'சீவாத்மன்' எனறும் கொண்டு, விருப்பு வெறுப்புடன் ஒருபால் கோடாது நடுவு நிலைமை

நின்றெழுகும் 'சீவாத்மா'வாகிய மனிதனே பரமாத்மனை அடைய முடியும் எனக் கொள்வது பொருத்தமே.

பாயிரத்தோடு கூடிய இல்லறவியல் அதிகாரங்கள் 24. இவற்றின் நடுமையத்தில்-'நடுவு நிலைமை கூறும் 12-ஆம் அதிகாரத்தைக் குறட் கோமான் அமைத்த அழகு பாராட்டத் தக்கது.

அறியத்தக்கது மட்டுமன்று; அறிந்து தெளிந்து அயராது கைக் கொண்டொழுகத்தக்க அவசியமான பண்பு நடுவு நிலைமை. செயலே வள்ளுவத்தின் உயிர் நாடி.

## தமிழ் மறவார் வாழ்க!

(இன்னிசை வெண்பா)

வறுமையிலும் வாழார்;பொய் பேசார்;என் றென்றும்
சிறுமைக்கும் உள்ளாகார்! ஓவாப் பிணியும்
உறுபசியும் காணார்! தமிழ் மறவார்! கற்றோர்
குறள்மலர் ஏட்டினைக் கண்டு.

ஆசிரியர், மு. சு. தங்கவேலன்,
மாதனூர்.

குறிப்புகள்:

## ஆதரவாளர்கள் அருள் நாடி.

• குறள் மலர் விரியத் தொடங்கியது முதல், ஆதரவு உறுப் பினராயும், உறுப்பினராயுமிருந்து வரும் அன்பர்களுக்கு நன்றி கூறு கிறோம். அவர்களது ஆண்டுக் கட்டணம் இந்த 12-ஆம் மலரோடு முடி வுறுகிறது. இறையருளும், அன்பர்கள் ஆதரவுமே கொண்டு நாம் மேற்கொண்டுள்ள இப்பெரும் பணி, திருக்குறளின் 133 அதிகாரங்க ளும்,குறள் மலரில் வெளிவந்த பின்னரே நிறைவேறும். ஆதலின், அன் பர் அனைவரது ஆதரவும் மலருக்கு இனியும் தொடர்ந்து இருந்துவர இறைஞ்சுகின்றோம்.- அன்பர்கள் தமது ஆண்டுக் கட்டணத்தை அருள் கூர்ந்து உடனே அனுப்பி உதவுவார்களாக.

## • மலரின் செழுமை.

மலரின் இதழ்கள் அதன் தொடக்கத்தில் 16 ஆக இருந்தன. இது போது அவ்விதழ்கள் 36, ஆக அதிகரித்துள்ளதை மலர் மணம் நுகரும் அன்பர் கவனித்திருப்பர். இனிவரும் மலர்கள், ஒவ்வொரு குறளுக்கும் ஒப்புமைப் பகுதி, மேற்கோட் பகுதி முதலியன ஏற்று மலரும். ஆனமையின், இதழ்கள் மேலும் அதிகரிக்கும். இது நமக்கு மனநிறைவு தரும் இன்செய்தி. கூடவே செலவினங்களும் அதிகரிக்கின்றன. தவிர்க்க முடியாதவை இவை. பொருட் செலவைவிட, மலரின் அறிவுசெறி நிறைவையே நாம் விழைகின்றோம். எனினும், மலரின் ஆக்கங் கருதிக் கட்டண விகிதங்களைச் சிறிது மாற்றவேண்டியுள்ளது:

ஆண்டுக் கட்டணமாக, இதுவரை உருபா 3 செலுத்தி ஒற்றை மலர் திங்கள்தோறும் பெற்றுவந்த உறுப்பினர், இனி உருபா 3-50 செலுத்தி ஆதரவு தந்தருளக் கோருகிறோம். திங்களுக்கு உருபா ஒன்று தந்து இதுவரை 5 மலர்ப்படிகள் பெற்றுவந்த ஆதரவு உறுப்பினரன்பர்கள் இனி, ஒரு உருபாவுக்கு 4 மலர்கள் ஏற்று உதவியருள அன்புடன் வேண்டுகிறோம்.

## • கடல் கடந்த அன்பர்களுக்கு;

அன்புக்கினிய பண்பினரே! உங்கள் அருமுயற்சியால் குறள் மலர் மணம் இதுபோது இந்நாவலந்தீவுக்கப்பாலும் பரவத் தொடங்கியுள்ளது. கடல்கடந்துறையும் கன்னித் தமிழ்த் தாயின் சேய்கள் உலகில் எங்கு உறையினும், தமது தமிழன்பிலும் பண்பிலும் தளர்வுறாது, தலைசிறந்து நிற்பர் என்பதை உலகறியும்! இதுபோது சிறு அளவில், ஆர்த்தெழுஆழி தாண்டி அக்கரைச் சீமைகளில் மணம் பரப்பத் தொடங்கியிருக்கும் குறள் மலர் இனி, பெரிய அளவில் ஆங்கு நிறைந்து மணம் பரப்ப உங்கள் பேராதரவும், பெருமுயற்சியும் தேவை. ஆங்காங்குள்ள குறளன்பர்கள் அருள்கூர்ந்து ஆதரவு உறுப்பினர், உறுப்பினர், அன்பளிப்பாளர் ஆகியோரைத் திரட்டித்தந்து, மலரின் செழுமை பேணுமாறு அன்புடன் அவர்தம் தமிழ்ப்பண்பினிற்குத்தலைவணங்கிவேண்டுகோள் விடுக்கிறோம். மலர் இனி பல புதுச் சிறப்புக்களையும் பெற்று மிளிரும் என உறுதி கூறுகிறோம்.

## * பாயிரப்பத்து. தனி நூல்!

(பாயிரத்தோடு கூடிய பத்து அதிகாரங்கள்)

முதல் அதிகாரமாகிய 'கடவுள் வாழ்த்து' முதல் 'இனியவை கூறல்' முடியவுள்ள 10 அதிகாரங்களையும், குறள் மலரில் மணம் வீசியவற்றைத் தொகுத்துத் தனி நூலாக வெளியிடவிருக்கும் அறிவிப்பு, மலரில் வந்துள்ளது. கவனிக்க; நூறு குறட்பாக்களுக்கும் இக்காலத் தமிழ்ப் பேரறிஞர் நூறு பேர்களின் விளக்கவுரையுடன் மலர் வெளிவந்துள்ளது. இத் தனிநூலில், ஏற்கனவே மலரில் வெளிவந்துள்ள விளக்கங்கள், இன்னும் அதிக விளக்கங்களுடனும், ஒவ்வொரு குறளுக்கும் மேற்கோட் பகுதிகள், ஒப்புமைப் பகுதிகள், குறளே யன்றிக் குறள் கருத்துக்கள் ஏனைய நூல்களில் எவ்வாறு எடுத்தாளப் பட்டுள்ளன என்ற ஆராய்ச்சிக் குறிப்புகள், பரிமேலழகர் உரை மட்டுமே யன்றி மணக்குடவர், காளிங்கர், பரிதியார் போன்ற பழைய உரைகாரர் பலரது உரைகள், உரை வேற்றுமைகள் முதலிய பல புதுச் சேர்க்கைகளும் இடம் பெறும். - இதுபற்றிய அறிவிப்பு சென்ற 11-ஆவது அதிகார மலரில் வெளியானவுடனேயே, அதனை வரவேற்று ஆர்வத்துடன் பலர் நமக்கு எழுதியுள்ளனர். தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரியுள்ளனர். நாலைந்து படிகள் தமக்குத் தேவையெனக் குறித்துள்ளனர் சிலர். இவ்வரவேற்பு நமக்கு ஊக்க மூட்டுகிறது. அன்பர்கள், பெரும் அளவில் இவ்வரிய நூல் பரவ உதவியருள வேண்டுகிறோம்.

* மலருக்கு, விழைவுடன் குறள் விளக்கம் தந்து அறம் வளர்க்கும் தமிழ்ப் பேராசிரியர்கள், புலவர்கள், ஏனைய தமிழ் அறிஞர் ஆகியோருக்கு, எவ்வாறு கைம்மாறுற்ற வல்லேம் யாம்? உளங்கனிந்த நன்றி ஒன்றினையே தலைவணங்கி நவில்வோம்! நன்றி; மிக்க நன்றி.

## * பொங்கல் வாழ்த்து.

தமிழரின் தனிப்பெருந் திருநாள் பொங்கற் புதுநாள். அன்பர் அனைவரும் எல்லா நலன்களும் இனிது எய்தப் பெற்று, வாழ்வாங்கு வளம் பெற வாழ்க என, தமிழன்னையின் பெயரால் வாழ்த்துகிறோம்.

* இறையருள் முன்னிற்க.

# தகுதி எனவொன்று...

குமாரி. சு. பத்மா. பி. ஏ; பி. டி.
சென்னை.

## குறள்-1. தகுதி எனவொன்று நன்றே பகுதியான்
## பாற்பட்டு ஒழுகப் பெறின். 111

[பரிமேலழகர்:- தகுதி என ஒன்றே நன்று-நடுவு நிலைமையென்று சொல்லப்படும் ஓரறமுமே நன்று; பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின்-பகை, நொதுமல், நண்பு என்னும் பகுதிதோறும் தன் முறைமையை விடாது ஒழுகப் பெறின்.

தகுதியுடையதனைத் 'தகுதி' என்றார். "ஊராளுேர் தேவகுலம்" என்பது போலப் பகுதியான் என்புழி ஆனுருபு. தோறும் என்பதன் பொருட்டாய் நின்றது. 'பெறின்' என்பது அவ்வொழுக்கத்து அருமை தோன்ற நின்றது. இதனால், நடுவு நிலைமையது சிறப்புக் கூறப்பட்டது,]

பொருள்:- ஒவ்வொரு வகையிலும் நீதி முறையை விடாமல் பின்பற்றி நடப்பதாயின், நடுவு நிலைமை என்று சொல்லப்பட்ட ஓர் அறமே சிறந்ததாகும்.

கருத்து:- யாரிடமும் நடுவு நிலைமையுடன் நடப்பதே சிறந்த அறமாகும்.

நடுவு நிலைமை என்பது பகை, நொதுமல், நண்பு என்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் நிலையாகும். அதாவது, அறத்தினின்று தவறுமல் நடப்பதே நடுவு நிலைமையாகும்.

விளக்கம்:- மண்ணுலகமும், விண்ணுலகமும் ஒருங்கு போற்ற மங்காத புகழ்பெற விரும்பின், மனிதனுக்கு இன்றியமையாது வேண்டற்பாலது 'நடுவு நிலைமை' என்ற அரிய பண்பாகும். நடுவு நிலைமை உடையோரே உலகில் வாழத்தகுந்தவர்; பெரியோர் எனப் போற்றத் தகுந்தவர்; யாவராலும் போற்றத் தகுந்தவர். எனவேதான், 'நடுவு நிலைமை' என்பதைக் குறிக்க 'தகுதி' என்ற சொல்லை வள்ளுவர் எடுத்தாண்டார் போலும். மேலும், அறங்கள் பலவற்றிலும். 'நடுவு நிலைமை' என்ற ஓரறமே தனி சிறந்தது என்பதை அறிவிக்கவே 'ஒன்று நன்றே' என்று கூறியிருப்பது கவிதொறும் நயம் பயப்பதாகும்.

இக்குறளின்கண் அமைந்த 'பகுதி' என்ற சொல் பகைவன், அயலான், நண்பன் ஆகியோரிடத்தும் தன் முறையை விடாது ஒழுகுதல் செயற்கரிய செயல்களில் ஒன்ருகும். எங்ஙனம்? பல்வேறு உணர்ச்சிகளின் கருவூலமாகும் மனிதனது மனம், உணர்ச்சிகளுக்கு அடிமையாகி தன்னிலையினின்று மனிதன் தவறுகிருன். பகையுணர்ச்சி எழுகையில் நகைமுகம் காட்டும் பான்மை உடையவனுக விளங்குதல் நன்று. பகையுணர்ச்சி மிகுதியால் பகைவன் செய்யும் நல்லனவற்றையும் குற்றக்கண் கொண்டு நோக்கி, அவன் சொற்கேளாது, அவனை மதித்தல் தனக்கு அழகன்று என நினைத்து அவனை ஒறுத்து முறைதவறி நடத்தல் நடுவு நிலைமையாகாது. தனக்காகத் தன் உயிரையும் ஈந்தருள முன்வரும் ஆருயிர் நண்பன் நன்மையல்லாதவற்றைச் செய்து தீய நெறிகளில் செல்கையில், "அவன் நமது நண்பன்: அவனைத் தடுத்தல் கூடாது" என எண்ணி முறைதவறி நடத்தல் கூடாது. (இதனையே வள்ளுவர் பிவ 'நட்பு' அதிகாரத்தில் "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு" (784) எனக் கூறுவார்) அவன் குற்றத்திற்கு ஏற்ப அவனை ஒறுத்து முறை விடாது ஒழுகுதல் வேண்டும். தான் அறியாத அயலானிடத்தும் முறைதவறி நடத்தல் தகாது. பல்வேறு உணர்ச்சிகள் தன்னிடத்துத் தோன்றுங்கால் அவற்றைக் களைந்து முறையை விடாது ஒழுகுதலை மககளாகப் பிறந்த எல்லோரிடமும் காண முடியாது. ஒருசிலரால்தான் இதுபோன்று ஒழுகமுடியும். எனவேதான் இக்குறளில் "பகுதியான் பாற்பட்டு ஒழுகப் பெறின்" என்று கூறி, அதன்மூலம், அச்செயல் 'செயற்கரிய செயல்' என்று வள்ளுவர் விளக்கியுள்ளார்.

மண்ணகம் மகிழ விண்ணகம் போற்ற விளங்கிய மனுநீதிச் சோழன், தன்னுயிர் போன்ற மகன் தேரோட்டி இளங்கன்றினைக் கொல்ல, ஆவிற்கு நீதி வழங்க தன் மகனென்றும் பாராது, தன் மகன் மீது தேராழி உற ஊர்ந்தான்! நற்றவத்தால் பெற்ற மகனேயாயினும் குற்றம் குற்றமே என்பதை நனகுணர்ந்து, நீதிமுறை விடாதொழுகியது அவனிடத்தில் இயல்பாக அமைந்த நடுவு நிலைமைப் பண்பினுலன்ரே!

எனவே, மனிதன் மனிதனுக வாழும் தகுதி பெற-யாவரும் போற்றும் தகுதி பெற விரும்பின், சமன்செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்து ஒருபாற் கோடாது வாழ்தல் வேண்டும்.

['பகுதி' என்பதற்கு, அறநூல் சொன்ன முறை என்பது காளிங்கர் உரை. பகை, நொதுமல், நண்பு எனும் பகுதியென்பது பரிமேலழகர், பழைய உரைகாரர் கருத்து 'அவரவர் நிலைமை'யென்பது மணக்குடவர் உரை. ஏற்பன தெரிக. —ஆசிரியர்.]

மேற்கோள் பகுதி:

ஆனுருபு. 'தோறும்' என்னும் பொருளில் வருதற்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

1. காரிரத்தினக்கவிராயர்: மாறனலங்கார உரை நூற்பா. 213.

ஒப்புமைப் பகுதி:

கோதி லார்குல மக்கள் மாக்கள்மற்
றேதி லாரென விழைந்த தீமையார்
ஆத லாற்றமர் பிறர்க ளாவதில்
கோதி லுலவர் குள்ளஃ தில்லையே. சூளாமணி; சீய-25.

மொழி பெயர்ப்பு:

The Alpha and the Omega of righteous life is propriety: and propriety reqireth that thou must give each man his due whether he be stranger, or a friend, or an enemy. (V. V. S) *

## மனிதப்பண்பெனும் அருளமுதம்.

தமிழகத்தின் மண்ணில் மாண்புமிக்க பல பெரியார்கள் வாழ்ந்து போயிருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் மணிமுடி போன்றவன் திருவள்ளுவன். மனிதகுலம் என்ற சிப்பியிலே விளைந்துள்ள விலைமதிக்கவொண்ணாத நன்முத்துப் போன்றவனவன். கலைகளுக்கெல்லாம் தலையாய கலையாகிய வாழ்க்கைக் கலையைப்பற்றி அரும்பெரும் ஆராய்ச்சிகள் செய்தவன், மனித இன நல்வாழ்விற்கான நல்லதொரு வாழ்க்கை முறையினை இந் நாநிலத்திற்கு நல்கியவன். இவனிடமிருந்துதான் அன்பெனும் பெருவெள்ளம் பெருக்கெடுத்தோடி இவ்வையகமெங்கும் பாய்ந்து பரவியது. இன்று மக்களிடையே மங்கிக்கிடக்கும் மனிதப் பண்பெனும் அருளமுதம் மறுபடியும் இவனிடமிருந்துதான் உலகமெங்கும் பாய்ந்து பரவப் போகின்றது. இந்த நற்பண்பிற்காகத்தானே இவ்வையகம் இன்று ஏங்கி நிற்கின்றது!

—சோ. சதாசிவம்.
"திருவள்ளுவன்"

# செப்பம் உடையவன்...

புலவர், பா. ஜகத்ரட்சகன்,
தமிழாசிரியர்,
நகர் மன்ற உயர்நிலைப்பள்ளி,
காரைக்குடி.

## குறள்-2.

**செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி**
**எச்சத்திற் கேமாப் புடைத்து.** *112*

[பரிமேலழகர்:- செப்பம் உடையவன் ஆக்கம்-நடுவு நிலைமையை உடையவனது செல்வம்; சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்புஉடைத்து -பிறர் செல்வம்போல் அழிவின்றி அவன்வழியிலுள்ளார்க்கும் வலியாதலை யுடைத்து.

நடுவு நிலைமை அதிகாரம், நன்றி செய்தார் மாட்டு அந்நன்றியினை நினைத்தவழிச் சிதையுமன்றே; அவ்விடத்தும் சிதையலாகாது என்றதற்குச் செய்ந்நன்றியறிதலின் பின் வைக்கப்பட்டது.]

கருத்து:- நடுவு நிலைமையை உடையவனது செல்வம் அழியாமல் அவன் வழி வருவார்க்கும் வலிமை தரும்.

விளக்கம்:- அறம் கூறவந்த திருவள்ளுவர் செய்ந்நன்றியறிதலோடு நடுவு நிலைமையில் நிற்கவும் வேண்டும் என்று கூறுகிறார். தகுதிப்பாடே நடுவு நிலைமையாகும். அதிகாரத்தின் முதற்குறளுக்குத் தகுந்தவிளக்கம் கொடுப்பன போல மற்ற ஒன்பது குறட்பாக்களும் அமைந்துள்ளன. முதற்குறளில் தகுதியென்றும, இரண்டாவது குறளில் செப்பம் என்றும் நடுவு நிலைமையைக் குறிக்கின்றார். ஒன்பதாவது குறளில், "சொற்கோட்டம் இல்லது செப்பம்" என்று விளக்கம் கூறுகின்றார். செப்பம் உடையவன் அறவழி நிற்கின்றான். அவன் உள்ளமும் நேர்மை பெறுகின்றது. திருவள்ளுவர், ஒரு அதிகாரத்தில் கூறிய கருத்தைப் பிற அதிகாரங்களிலும் கூறி விளக்கம் செய்கிறார். 'வெஃகாமை' என்ற அதிகாரத்தில் நடுவு நிலைமை இன்மையால் வரும் கேடுகளைக் கூறுகின்றார். "நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்" என்கிறார். அதாவது, நடுவு நிலைமையின்றி மிக்க பொருளை விரும்புவானாயின், அதனாலே குலமுங் கெட்டுக் குற்றமும் உண்டாகும் என்கின்றார். மற்றொரு குறளிலே, நடுவன்மை நாணுபவர்கள் பயனை விரும்பிப் பழியான

செயலைச் செய்யமாட்டார்கள் என்கின்றார். மேலும், செப்பமுடையவன் தவம் செய்பவரைக் காட்டிலும், தானம் செய்பவரைக் காட்டிலும் பொய்யாவிளக்கம் பெறுகின்றான் என்கின்றார்.

நடுவு நிலைமையில் உள்ளவனுடைய ஆக்கம் சிதைவின்றி நிற்கும். ஆக்கம் தருவதனை 'ஆக்கம்' என்றார். ஆக்கம் மேன்மேலுயர்வதாகும். உலகில் பொருள் ஒருவனிடத்தில் நிலைத்து நிற்காததற்குக் காரணம், அவன் நடுவு நிலையினின்றுவழுவிப் பொருள் சேர்த்ததேயாகும். இன்னல் தரும் பொருளை ஈட்ட நடுவு நிலையினின்று நழுவுகின்றார்கள், அப்படித் தீய வழியில் ஈட்டிய பொருளைப் பேணிக் காக்க முடியாமல் துன்புறுகிறார்கள். பேராசையின்றித் தன்னலமற்றுச் செப்பமான முறையில் பொருளை ஈட்டவேண்டும். தனது முன்னேற்றம் குறித்துச் சிலர் நடுவு நிலையினின்று நழுவிப் பொருள் ஈட்டுகிறார்கள். ஆனால், அப்பொருள் அவர்கள் காலத்திலேயே சிதைந்து விடுகின்றது.

தான் இறந்துழித் தன் வழியிலுள்ளார் எஞ்சி நிற்பதால், அவர்களை எச்சம் என்றார். செப்பம் உடையவன் ஆக்கம்தான அறம் ஈனும்; இன்பமும் ஈனும். அஃது, அருளொடும் அன்பொடும் வந்ததாகும். அறத்துக்கும் துய்த்தற்கும் பொருள் ஈட்டுவார் சிலர். ஆனால், தம்பிள்ளைகட்கு வைக்க வேண்டும் என்று பொருள் ஈட்டுவர் பலர். இம்மகவன்பு, கொடாதும் உண்ணாதும் பொருள் சேர்த்தற்குக் காரணமாவது. இம்மனப்பாங்கினைத் திருவள்ளுவர் நன்கு அறிந்தவர். வையம் எதை வரவேற்கின்றதோ அவ்வழியே நின்று தூய்மை ஊட்டல் வள்ளுவரின் செயல் முறையாகும். ஆகையால், நடுவுநிலைமை உடையவனது செல்வம்தான் அழிவில்லாமல் அவன் வழியிலுள்ளார்க்கும் வலிமை தரும் என்றார்.

இக்கருத்துப் பற்றியே "அறத்தா றிட்டு நம் பொருள் படுமோ" என்று பரஞ்சோதி முனிவர் கூறினர். திருவள்ளுவரும், "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்று அரண் செய்கின்றார்.

ஒப்புமைப் பகுதி:

1. "அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை" மணிமேகலை:17:3-4.

2. "பழியில் நீங்கிநன் கீட்டிய பசும்பொருள் சிறிதும்
கழிப பாதுநல் வழிப்பயன் படுவது கடுப்பக்
கொழிதி ரைச்சுவைப் பாலியின் குளிர்புனல் முழுதும்
வழுவு றாதுகால் வழிச்சென்று வளவயல் நிறைக்கும்"
காஞ்சி புராணம்: நாட்டுப். 70.

மொழி பெயர்ப்பு:

The wealth of the upright dwindle not and passes on to their posterity. (V. R. R) *

# நன்றே தரினும்...

திரு. அ. தாமோதரன், எம். ஏ;
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

## குறள்-3.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். 113

[பரிமேலழகர்:- தீங்கன்றி நன்மையே பயந்ததாயினும், நடுவு நிற்றலை ஒழிதலான் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழிய விடுக.

நன்மை பயவாமையின், நன்றே தரினும் என்றார் இகத்தலான் என்பது இகந்து எனத் திரிந்து நின்றது. இவை இரண்டு பாட்டானும் முறையே, நடுவு நிலைமையான் வந்த செல்வம் நன்மை பயத்தலும், ஏனைச் செலவம் தீமை பயத்தலும் கூறப்பட்டன]

விளக்கம்:- வாழ்வின் துவக்கம் இலட்சிய வுணர்வு; வாழ்க்கைச் செலவு இலட்சியப் பயணப் போராட்டம்; வாழ்வின் எல்லை இலட்சிய அடைவு; வாழ்வியல் ஓர் இலட்சிய வரலாறு; எனவே, வாழ்வாங்கு வாழ்தலாவது சீரிய இலட்சிய வரலாற்றோடு வாழ்தல். ஆனால், இலட்சியத்தை அடைதல் வாழ்வின் வெற்றி என்றோ இலட்சியத்தை அடையாமை வாழ்வின் தோல்வி என்றோ கூறிவிடலாகாது மாறாக, தூய இலட்சியத்தின் செயல்முறையைப் பொறுத்து வாழ்வியலமைவு நிர்ணயிக்கப்பட்டது. இதனால்,இலட்சியத்தின்முடிவுஅதன் செயற்பாடு-நெறி முறை இவற்றால் பொலிவு பெற்றது. பெறவே, தூய நோக்கம் அதனை அடைதற்கரிய தொடர் நெறிச்செய்கையாலேயே விழுமிய ஆக்கத்தைத் தர வியலுமென்பது தெளிவு. இக்கருத்தை, இந்தியத் தத்துவ ஞானம் நன்கு உணர்த்துகிறது. இக்குறளிலும் அதுவே வள்ளுவரால் வலியுறுத்தப்படுகிறது.

நடுநிலை பிறழ்ந்தலால் வரும் ஆக்கம் தீமையன்றி ஒரோவழி நன்மையை அளிக்குமாயினும், அவ்வாக்கத்தை அப்பொழுதே விடுதல் வேண்டும். விளங்கக் கூறினல், நோககம் தூயதாயினும் நெறியில் நின்றால் ஆக்கம் கைகூடும்; நெறியினின்று பிறழ்ந்தால் அது கைகூடாது; ஒருவேளை ஆக்கம் கைகூடினும் நெறியின்றி வந்த அது நல்ல விளை

வைத்தராது; ஒருவேளை நன்மையைத் தந்தாலும், அது குறிக்கொண்டு காத்துகளைத் தொதுக்கற்கரியது எனலாம்.

தீதின்றி வந்த ஆக்கம் அறனும் இன்பமும் தரும்;வாழ்வில் பயனைக் கூட்டும்; வாழ்வைப் புகழும் நிறைவும் உடையதாய் ஆக்கும். உரிய நெறியின்றி வந்த ஆக்கம் மறமும் துன்பமும் தரும்; வாழ்வில் வறுமையைச் சேர்க்கும்; வாழ்வைப் பழியும் குறையும் உடையதாய் ஆக்கும். ஏனெனின், யார் எதை விதைக்கிருர்களோ, அதையே அறுக்க வேண்டும்; அதன் பயனையே அடைய முடியும். இவ்வுண்மைகள் வாழ்வியல் உண்மைகள். இவற்றையே வள்ளுவரும் பிற சான்ருேரும் வகுத்துக் காத்துப் போற்றிப் புகழ்ந்து நமக்கு அளித்துச் சென்றனர். இவற்றையே இந்தக் குறளும், பின்வரும் பாடல்களும் வலியுறுத்துகின்றன.

★ "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்." (குறள்)

★ "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு" (குறள்)

★ "வாணன் வைத்த விழுநிதி பெறினும்
பழிநமக்கு எழுக என்னுய்" (மதுரைக்காஞ்சி)

★ 'புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம்)

★ "வங்கம்போழ் முந்நீர் வளம்பெறினும் வேருமோ
சங்கம் போல் வான்மையார் சால்பு"
(புறப் பொருள் வெண்பா மாலை)

★ "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்" (குறள்)

★ "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்" (குறள்)

★ "பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்ருேர்
கழி நல் குரவே தலை" (குறள்)

மேற்கோள் பகுதி:- பாவிக அலங்காரத்திற்கு மேற்கோளாகக் காட்டப் பட்டுளது.

1. காரிரத்தினக் கவிராயர்; மாறனலங்கார உரை நூற்பா, 251.

ஒப்புமைப் பகுதி:

"செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்பொரு
ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ"
கலித்தொகை. 14: 14-15.

"நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்" குறள். 171.

"களவினு லாகிய வாக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்" குறள். 283.

மொழி பெயர்ப்பு:-

"Though it yields only good, abandon on the very day the wealth ill-gotten by partiality" (**M. S. P.**) *

---

## மலர் மணம்.

தவத்திரு; துறவி, கந்தசாமி அவர்கள்.
**ஆசிரியர்; 'அருட் சுடர்' வடலூர்.**

அன்புசால் பெருந்தகையீர்!

வணக்கம். 'குறள் மலர்' வரப்பெற்று மகிழ் வெய்தினேன். வள்ளுவர் உள்ளத்தெழுந்த தெள்ளு தமிழாம் திருக்குறளின் உள் ளக்கிடக்கையைத் தெள்ளத்தெளிய உலகுக்கு அள்ளி வழங்கும் 'குறள் மலர்', அவனி யெங்கும் ஆனந்தமாக பவனி வந்து, அனை வரையும் நன்னெறியில் அழைத்துச் சென்று, வானும் புவியும் உள்ளவரை வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றேன். அவ்வாறு வாழ அருள்யவேணுமாய் வள்ளற் பெருமானை வணங்குகின்றேன்.

வாழ்க 'குறள் மலர்'; சூழ்க நன்னெறி.

---

# தக்கார் தகவிலர்...

திரு. அ. கேசவமூர்த்தி எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
அய்ய நாடார் சானகியம்மாள் கல்லூரி.
சிவகாசி.

## குறள்-4. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் 114

சொற்பொருள்:- தக்கார்-நடுவுநிலைமையுள்ளவர்; தகவிலர்-நடுவு நிலைமையிலலாதவர்; என்பது; அவரவர் எச்சத்தால்-அவரவருடைய எச்சத்தால்; காணப்படும் அறியப்படும்.

விளக்கம்:- நடுவுநிலையுள்ளவர், இல்லாதவர் என்பதை அறிய இக் குறளில் வழி கூறுகின்றார் வள்ளுவர். ''மக்களே போல்வர் கயவர்'' என்று, உள்ளத்தால மாறுபட்டு உருவால் ஒன்றெனத் தோன்றும் விந்தையை விளக்கிய வித்தகர் அல்லவா வள்ளுவர்!

'எச்சம்' என்பதற்கு, 'மக்கள்' எனப்பொருள் கூறி, நன்மக்கள் உண்மையானும இன்மையானும் ஒருவருடைய நடுவுநிலைப் பணபு உண்டா, இலலையா எனபது உணரப்படும் என்பர் பரிமேலழகர்.

ஆரவாரத் தொழிலால் (எச்சத்தால) அறியப்படும் என்று மணக் குடவர் மொழிவர்.

ஒழுக்கத்தால் (எச்சத்தால்) காணப்படும் என்று உரை காண்பர் காலிங்கர்.

இறந்தபின் எஞ்சி நிற்கும் புகழாலும், பழியாலும் (எச்சத்தால்) உணரபபடும என்று, மு. வ. அவர்கள் பொருள கூறுவர்.

பரிதியார் கருத்து, பரிமேலழகர் கருத்தை ஒத்ததே.

''மகனறிவு தந்தையறிவு'' என்பது பெரும்பாலும் உண்மையே. ''பழி இலமை மக்களால் காண்க'' (நான்மணிக் கடிகை; 61.) ''மகன் உரைக்கும தந்தை நலத்தை'' (நான்மணி, 68) ''தந்தையான் ஆகும் குலம'' (சிறுபஞ்ச மூலம்; 31) எனும் சான்றோர் முடிவுகள் பரிமேலழகர் கருத்தை அரண் செய்யும்.

பரிமேலழகர் உரைப் பொருளுக்கு மாறுபட்டு உலக நடைமுறை இருப்பதுமுண்டு· நடுவு நிலைமைமிக்க நல்லவருக்குப் புல்லர் பிறப்பதுமுண்டு; இதற்கு மாறுதலையாக அமைவதுமுண்டு. "கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்" என்று தொடங்கி "அறிவார் யார் நல் ஆள் பிறக்கும் குடி" என்று வினவி முடியும் (நான்மணி; 4) பாட்டு இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. குடித்து வீதியில் புரண்டான் குணக்குன்றாகிய காந்தியின் மகன்! கோப்பெருஞ் சோழன் மைந்தர் கொடுவாள் ஏந்தினார் தந்தையைக் கொல்ல. இன்னபிற சான்றுகள் இன்னும் பல உண்டு· இவை. விதிவிலக்கு-சிறுபான்மை என்று செப்பினாலும், 'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' எனப் பொருள் கொண்டால் இன்னும் ஓர் குறையுமுண்டு;

இல்லறத்தில் ஈடுபட்டு மக்களைப் பெறாதவர், இல்லறத்திலேயே இறங்காதவர் என்ற பிரிவினரில் எப்படித் தக்கார், தகவிலர் என்று பகுத்துணர்வது?மக்களைப் பெறவில்லை;எனவே பண்பறிய இயலவில்லை என்பது உரையா? முறையா?

ஒருவர் இறந்தபின் எஞ்சி நிற்கும் புகழால், அல்லது பழியால் ஒருவருடைய செம்மை அல்லது சிறுமை உணரப்படும் என்று பொருள் காண்பதே பொருத்தம் ஆகும். பரிமேலழகரும், 'எச்சம்' என்பதற்கு 238, 1004 ஆகிய எண்ணிட்ட குறள்களில் "எச்சம் என்றார், செய்தவர் இறந்து போகத் தான் இறவாது நிற்றலின்" என்று விளக்குவது இங்கு நோக்கத் தக்கது. "எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சை; மற்று அல்ல பிற" எனும் நாலடியார் (134) எச்சம் எனும் சொல்லை மேலும் நிச்சயமாக விளக்குகிறது.

நயம்:- 'காணப்படும்' என்று முடிக்கும் தொடர் இங்கு அமைந்தது. குறள் 185-குறள் 349 ஆகியன முறையே 'புன்மையால் காணப்படும்'; 'நிலையாமை காணப்படும்' என்று முடிவது இங்கு ஒப்பு நோக்கி மகிழத் தக்கது.

'எச்சம்' என்பதற்கு 'மக்கள்' எனப் பொருள் கொண்டு, 'தக்கார் தகவிலா என்பது அவரவர் மக்களால் காணப்படும்' என்று திருத்தி, எதுகை இன்பம் இதில் இணைக்கப்பட்டது என்ற ஐரோப்பியத் தமிழன்பர் ஒருவரைத் திரு. தியாகராசச் செட்டியார் அவர்கள் காணவே விரும்பாமல் கதவடைத்த நிகழ்ச்சி தமிழ் உலகு அறிந்த ஒன்றாகும்.

மேற்கோள் பகுதி:- வல்லின எதுகை, கடையாகு எதுகை போன்ற எதுகை வகைகளை விளக்கவும், 'அவரவர்' போன்ற பெயரடுக்குமொழி பற்றி விளக்கவும் மேற்கோளாக இது காட்டப்பட்டுள்ளது.

1. இளம்பூரணர்: தொல்காப்பியப் பொருளதிகார உரை. நூற்பா. 407.

2. நச்சினார்க்கினியர். தொல்காப்பியச் செய்யுளியலுரை. நூற்பா. 94.

3. குணசாகரர்: யாப்பருங்கல விருத்தியுரை நூற்பா. 37.

4. ,, யாப்பருங்கலக் காரிகை யுரை ,, 41.

5. பெருந்தேவனுர்: வீரசோழியவுரை ,, 111.

6. யாரோ: சிதம்பரப் பாட்டிய லுரை , 13.

7. சுப்பிரமணிய தீட்சியர்; பிரயோக விவேகவுரை ,, 39.

8. வைத்தியநாத தேசிகர்· இலக்கண விளக்கவுரை ,, 748.

9. வீரமா முனிவர்; தொன்னூல் விளக்கவுரை ,, 214.

ஒப்புமைப் பகுதி:

1. "பழியின்மை மக்களாற் காண்க"—நான்மணிக்கடிகை 63.

2. 'மகனுரைக்குந் தந்தை நலத்தை" ,, 70.

3, "நன்றிப் பயன்தூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார்" —திரிகடுகம் 63.

4. "தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியரா பொல்குவார்" —சிறுபஞ்ச மூலம் 81,

5. "தக்கவர் தகவிலர் என்பது
ஆங்கவர் பயந்த புதல்வனுல் தெளிய
அறிமினென் றறைகுவர் பெரியோர்"
—பிரபுலிங்க லீலை; அக்கமா. உற். 20.

மொழிபெயர்ப்பு:-

If person just or unjust, is proved by their progeny.
(S. M. M) *

# கேடும் பெருக்கமும்...

பேராசிரியர், சித்தலிங்கம் எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
காசி இந்துப் பல்கலைக் கழகம்,
காசி.

குறள்-5.
கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. 115

[பரிமேலழகர்:- கேடும் பெருக்கமும் இல் அல்ல=தீவினையால் கேடும் நல்வினையால் பெருக்கமும் முன்னே அமைந்து கிடந்தன; நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி=அவ்வாற்றையறிந்து அவை காரணமாக மனத்தின்கட் கோடாமையே அறிவான் அமைந்தார்க்கு அழகாவது.]

கருத்து:- தாழ்வும் உயர்வும் (உலகில்) இல்லாமலில்லை. மன நேர்மை தவறாதிருப்பதே உயர்ந்தோர்க்கு அழகாம்.

விளக்கம்:- உலகில் செல்வமும் வறுமையும், உயர்வும் தாழ்வும் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளடங்கி நிகழ்கின்றன. நல்வினை, தீவினையாகியவை இவற்றை மக்களுக்கு ஊட்டுகின்றன என்று பழநூல்கள் கூறுகின்றன. எனவே, ஒருவன் தன் முயற்சியால், எப்படியேனும்-தன் நிலை வழுவியேனும்-செல்வம்பெற எண்ணுவது பயனற்றதாம். நேர்மை (நடுவு நிலைமை) மனிதப் பண்பின் உயர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இத்தகைய சிறப்பை இழக்கக் கருதுவது பயனற்றதாகும்.

மேலும், நெஞ்சுகோடி (நடுவுநிலைமை தவறி)ப் பொருள் தேட முயன்றாலும், முன்னைய நல்வினை, தீவினைகள் இடம் தந்தாலே அது அமையும். எனவே, மனந்திரியாது நிற்றலே அறிவுடையோர்க்கு அழகாகும். இக்கருத்தையே வள்ளுவர்,

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்" (169)

என்னும் குறளிலும் குறிப்பிட்டிருக்கிறார்.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

என்ற புறநானூற்று (192) அடிகளும் இப்பொருளையே விளக்குகின்றன.

ஆகவே, உடனடியாக ஏதோ நன்மை கிடைக்கலாம் என்னும் எண்ணத்தால் நடுவுநிலைமை தவறுதல் பண்புடையார் செயலன்று; அது பயனும் தராது.

[ஒப்புமைப் பகுதி:-

"ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தொடு பாவமாய
போக்கி வேறுண்மை தேறார்"—கம்ப. கிட்கிந். வாலி: 39.

குறிப்பு:- விதியான் அமைந்த ஆக்கக் கேடுகளுக்காக இப்போது நீதி திரிந்து வருகின்ற பிறவிக்கும் கேடு தேடிக்கொள்ள வேண்டாமே! என்கின்றது இக்குறள். —ஆசிரியர்.]

மேற்கோள் பகுதி:-

நடுவு நிலைமையை விளக்க எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது:

1. யாரோ, திருமலைக் கொழுந்து வெண்பா.

ஒப்புமைப் பகுதி:

1. "தீதும் நன்றும் பிறர்தர வாரா"—புறநானூறு 192.
2 "ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தொடு பாவமாய
போக்கி வேறுண்மை தேறார்"
கம்பர். கிட்கிந்தை வாலி. 39.

மொழி பெயர்ப்பு:

Adversity and prosperity attend on all. (M. S. P.) it is the ornament of the wise to preserve evenness of mind. (R. D.) *

# கெடுவல் யான்...

இரா. நடராசன், எம். ஏ., எம். லிட்.,
முதனிலைக் கல்லூரி,
கோலார் தங்கவயல்.

குறள்-6. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின் *116*

[பரிமேலழகர் - ஒருவன் தனனெஞ்சம் நடுவு நிற்றலையொழிந்து நடுவல்லவற்றைச் செய்ய நினைக்குமாயின், அந்நினைவையான் கெடக் கடவன் என்றுணரும் உற்பாதமாக அறிக.

நினைத்தலும் செய்தலோடு ஒக்குமாகலின், செயின் என்றார்.]

கருத்துரை - ஒருவன் தனது மனம் நடுவுநிலைமையினின்றும் விலகி அதற்குப் புறம்பானவற்றைச் செய்ய நினைத்தால், அந்நினைவைத் தான் கெடக் கடவதை முன்பே அறிவிக்கும் எச்சரிக்கையாகக் கருதுக.

விளக்கம்:- பகைவர், நண்பர், அயலார் என்னும் மூன்று பகுதியினும், அறத்திலிருந்தும் விலகாமல் ஒப்ப நிற்கும் நிலைமையே நடுவு நிலைமை. ஒருவர் நீதி வழங்கும்போது மூன்று விதப் பாகுபாட்டையும் மறந்துவிடவேண்டும் அப்பொழுதுதான், அவர் மனதில் கோபமும் மகிழ்வும் பிறவா. காய்வதன்கண் ஒருவரின் குணம் தோன்றாது; உவப்பதன்கண் ஒருவரின் குற்றம் புலப்படாது. சங்ககால அறங்கூறவையத்தில் எவ்வாறு நீதிவழங்கினார்கள் என்பதைப் பின்வரும் வரிகளால் அறிக

"அச்சமும அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை யறங்கூ றவையமும்"

(மதுரைக் காஞ்சி, 489-492)

இக்குறளில் நெஞ்சம் குறிக்கப்பட்டிருத்தலைக் காண்க. நினைத்தலும் செய்தலோடுஒக்குமாகலின் 'செயின்' என்றதாகப் பரிமேலழகர் விளக்கு

கின்றார். மனத்தின் அடியாகச்சொல்லும் செயலும் பிறத்தலின் மனதைக் கூறியது பொருத்தமே. மேலைக் குறளில், தீவினையால் கேடும் நல்வினையால் கேடு. நல்வினையால் பெருக்கமும் யாவர்க்கும் முன்பே அமைந்திருப்பதை அறிந்து, அவை காரணமாக மனத்தின்கண் கோடாமையே சான்றோர்க்கு அழகு என்றவர். இக்குறளில், மனம் நடுவுநிலைமையிலிருந்து வளைந்தால், அதனை எச்சரிக்கையாகக் கருதுக என்று எச்சரிக்கின்றார். பட்டினப் பாலையிலும் மனமே கூறப்பட்டுள்ளது.

''நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து'' (206-208)

இக்குறள், முறை வழங்குவதற்கு மட்டும் கூறப்பட்டிருப்பதாக நினைக்கவேண்டாம். யாருமே தமது கடமையாகிய அறத்திலிருந்தும் வழுவாமல் இருக்கவேண்டும் என்பதை அறிவிக்கவே இக்குறள் எழுந்தது. சான்றாக, வணிகர்கள் கள்ளச் சந்தையினால் செல்வம் பெருக்க வேண்டும என்று அவர்கள் மனம் நினைத்தால, அதை எச்சரிக்கையாகக் கருதி, அந்நினைவை மனதிலிருந்து உடனே அகற்றவேண்டும். அரசியல் அலுவலர்கள் கையூட்டு பெறுவதினால செல்வம் பெருக்க நினைத்தால், உடனே அந்நினைவை மறக்கவேண்டும். இவ்வாறே, ஏனைய துறைகளில் உள்ளவர்களும் அறத்திலிருந்து நீங்கிச் செல்வம் சேர்க்கும் நினைவை மறக்கவே வேண்டும்.

மனச்சாட்சி (Conscience) தான் இதற்கெல்லாம் காரணம். மனச்சாட்சி மறவழி காட்டாது. மதில் காவலைக் காட்டிலும் மனக்காவலே சிறந்தது. மனம் காவலாவதற்கு, இறைவன் 'உள்குவார் உள்கெற்றெல்லாம் உடனிருந்து அறிகின்றான்' என்ற உண்மையை நாம் உணரவேண்டும். எனவே, இக்குறள், உலகைத் தீமையினின்றும் விடுவிக்க வல்ல மருந்தாக என்றும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

இலக்கணம்:- கெடுவல்-தன்மை ஒருமை வினைமுற்று. அறிக- விதித்தற் பொருட்கண் வந்தவியங்கோள் வினைமுற்று. தன்னெஞ்சம்- ஆறும் வேற்றுமைத் தொகை. ஓரீஇ-சொல்லிசை அளபெடை. செயின்

என்னும் வினையெச்சம், அறிக என்னும் வியங்கோள் வினைகொண்டு முடிந்தது.

மேற்கோள் பகுதி:- நடுவுநிலைமையை விளக்க எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது;

1. வெள்ளியம்பலவாணர்; முதுமொழி மேல் வைப்பு.24. ஒப்புமைப் பகுதி:

1. "..........ஒருவன்
கெழியின்மை கேட்டாலறிக" (நான்மணிக்கடிகை-63.)

2. "கோடி நடுநிலைமை தவறுவானும்"
(பிரபுலிங்கலீலை; அக்கமா.துறவு. 33)

மொழிபெயர்ப்பு:-

If one's heart swerves from the upright path and does wrong, let it discern, 'I go to ruin' (M. S. P) *

## மலர் மணம்.

திரு. சே. கு. முத்தையா அவர்கள்,
செயலாளர்: சேலம் மாவட்ட சன்மார்க்க சங்கம்,
முத்தமிழ் இலக்கிய மன்றம், நங்கவள்ளி.

'குறள் மலர்'—'செய்ந்நன்றி அறிதல்'—அதிகார இதழ் கண்டேன். அதிகாரத்திலுள்ள பத்து செய்யுட்களையும், தக்கார் பதின்மரைக்கொண்டு, பாமரனும் எளிதில் அறியும் வண்ணம், கருத்துக்களை ஆராய்ந்து வெளியிடும் தங்கள் பணி தமிழுக்குச் செய்யும் மாபெரும் தொண்டாகும் தங்கள் சீரிய பணி சிறக்கட்டும்; குறள் மலரின் மணம் வையகமெங்கும் வாசகர் வட்டத்தில் பெருகட்டும்; ஒவ்வொரு நூலகங்களிலும், படிப்பகங்களிலும் இருக்கவேண்டிய வாடா மலராகும் 'குறள் மலர்.'

—சே. கு. முத்தையா.

# கெடுவாக வையாது...

பேராசிரியர், பொ. முத்தரசு எம். ஏ., பி டி.,
தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் கலைக்கல்லூரி.
அருள் நந்திநகர். ஸ்ரீ வைகுண்டம.

## குறள்-7. கெடுவாக வையாது உலகம் நடுவாக
## நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

[பரிமேலழகர்:- நடுவாக நின்று அறத்தின்கண்ணே தங்கினவனது வறுமையை, வறுமையென்று கருதார் உயர்ந்தோர்.

கேடுஎன்பது முதனிலைத்தொழிற்பெயர். செல்வம் என்றுகொள்ளுவர் என்பது குறிப்பெச்சம். இவை மூன்று பாட்டானும், முறையே கேடும் பெருக்கமும் கோடுதலான் வாரா என்பதூஉம், கோடுதல் கேட்டிற்கு ஏதுவாம் என்பதூஉம், கோடாதவன் தாழ்வு கேடன்று என்பதூஉம் கூறப்பட்டன.]

சொற்பொருள்;

நடுவாக-நடுவு நிலைமையில் தவறாது; நன்றிக்கண்-அறத்தின் கண்ணே; தங்கியான்-நிலைத்து நின்றவனது; தாழ்வு-வறுமையை; உலகம்-உயர்ந்தோர்; கெடுவாக-வறுமையாக; வையாது-கருத மாட்டார்.

பொழிப்பு; நடுவு நிலைமை யொழுக்கத்தில் சிறிதும் தவறாது. (யாவர்க்கும் நலம் பயக்கும்) அறத்தின் கண்ணே நிலைத்துநின்றவனது வறுமையை, உயர்ந்தோர் தாழ்வாகக் கருதமாட்டார். (அத்தாழ்வையே உயர்வாக மதிப்பர்)

விளக்கம்;- 'நடுவுநிலைமை யொழுக்கத்தைத் தொடர்ந்து கடைப் பிடிப்பது கடினம்; அதனுல் பொருள்வளம் குறையும்; எனவே வாழ்வு தேய்ந்து தாழ்வு வருமே!' என்று இதனைப்பேண மனம் மறுகிச் சுழல்வாரை நோக்கித் தெய்வப்புலவர் இங்ஙனம் அருளிச்செய்திருக்கின்றார்.

'நன்றி' என்பதற்கு 'அறம்'என்றுபரிமேலழகரும்,'நன்மை'என்று மணக்குடவரும், 'நன்னெறி' என்று காளிங்கரும் பொருள் கூறியுள்ளனர். தங்கியான் என்பது, எத்தகைய இடர்கள் தாக்கியபோதும் நடுவு

நிலைமையில் பிறழாத திண்ணிய நெஞ்சத்தோடு நிலைத்து நின்றவன் எனத் தெளிவாக உணர்த்துகிறது பொருள்வளம் வாழ்வின் உயர்வாதலால், பொருட்கேடு 'தாழ்வு' எனப்பட்டது. உள்ளம் கோணாத நல்லவர்களுக்கு அல்லல் உளவாகா;ஒருவேளை ஊழ்வயத்தால் பொருட்கேடு நேர்ந்தால் அதனை உலகம் கேடாகக் கொள்ளாது; உயர்வாகவே மதிக்கும். 'வையாது' எனவே, மக்கள் இகழ்ந்து பழியார்; மாறாக, உவந்து போற்றுவதோடு என்றும் பொதிந்து நினைவர் என்பதாம்.

சேற்றில் வீழ்ந்தாலும் வைரமணியை யாவரும் போற்றிப் பேணிக் கொள்வர். தாழ்வு நேர்ந்தாலும் நடுநிலையில் பிறழாத நன்மையாளனை உலகம் புகழ்ந்து போற்றிக் கொள்ளும். கேடு கேடாகாமல் பீடும் பெருமையுமாக உயர்கிறது.

ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதும் திருநாவுக்கரசர் சமண சமய வேந்தனால் சொல்லொணா இடர்களுக்கு ஆளானதும், காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டதும் இச்சான்றோர்களுக்குப் பெருமையே அன்றித் தாழ்வில்லை என்பதையும் கண்டு கொள்க.

[கேடு-முதனிலைத் தொழிற் பெயர்; செல்வம் என்று கொள்வர் என்பது குறிப்பெச்சம்]

மேற்கோள் பகுதி:- நடுவு நிலைமையை விளக்கத் தினகர வெண்பாவிலும், கெடு' என்ற முதனிலைத் தொழிற் பெயரின் இலக்கண அமைதியை விளக்க ஏனைய விடங்களிலும் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

1. சுப்பிரமணிய தீட்சிதர்: பிரயோக விவேகவுரை. நூற்பா 35, 42.
2. சாமிநாத தேசிகர்: இலக்கணக் கொத்துரை. நூற்பா. 66.
3. சிவஞான முனிவர்: நன்னூல் விருத்தியுரை. ,, 45.
4. ,, ,, : முதற் சூத்திர விருத்தி,
5. யாரோ: தினகர வெண்பா: பாடல். 14.

ஒப்புமைப் பகுதி:

1. ''அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
   கேடும் நினைக்கப் படும்'' குறள், 169:
2. ''சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
   வறங்கூர்ந் தனைய துடைத்து.'' குறள் 1010.

மொழி பெயர்ப்பு:-

The world looketh not down on the pouerty of the upright and virtuous man. (V. V. S) *

# சமன்செய்து...

திரு. அ. ரசபதி.

குறள்-8. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி. 118

[பரிமேலழகர்: முன்னே தான் சமனாக நின்று பின் தன்கண் வைத்த பாரத்தை வரையறுக்கும் துலாம்போல, இலக்கணங்களான் அமைந்து ஒருபக்கத்துக் கோடாமை சான்றோர்க்கு அழகாம்.

உவமையடையாகிய சமன்செய்தலும் சீர்தூக்கலும் பொருட் கண்ணும், பொருளடையாகிய அமைதலும் ஒருபால் கோடாமையும் உவமைக்கண்ணும் கூட்டி, சான்றோர் சீர்தூக்கலாவது தொடைவிடை; களால் கேட்டவற்றை ஊழான் உள்ளவாறுணர்தலாகவும், ஒருபாற் கோடாமையாவது அவ்வுள்ளவாற்றை மறையாது பகை நொதுமல் நட்பு என்னும் மூன்று திறத்தார்கண்ணும் ஒப்பக் கூறுதலாகவும் உரைக்க. இலக்கணங்களான் அமைதல் இருவழியும் ஏற்பன கொள்க.]

நடுவு நிலைமைக்கு நேர் உவமை காட்டும் குறளாகும் இது. 'சீர்தூக்கும் கோல்போல்' என்று மட்டிலும் சொல்லி மனநிறைவு கொண்டாரில்லை வள்ளுவர். 'சமன்செய்து' என்று, முதலில் சீர்தூக்குங் கோலின் ஒழுங்கை வற்புறுத்துகிறார் நிறைகாட்டும் தராசே குற்றமுடையதாக இருந்தால், அது வேலியே பயிரை மேய்ந்ததாக முடியும்! அதுபோல, நீதி வழங்குவான், இருபக்கத்து நீதியையும் கேட்குமுன், தன் மனம் யார்மாட்டும் சாய்ந்திராமற்படி வைத்துக்கொள்ளக் கடவன்.

ஆவின்கன்றினைத் தேரூர்ந்து கொன்ற தன் மகனை, அவன் தன் மகன் என்றும் பாராமல், அவன்மீது தானே தேரைச் செலுத்தித் தாய்ப்பசுவிற்கு நீதி வழங்கினான் மனுநீதிச் சோழன். தவறு செய்தது தனது சொந்தக் கையே யெனினும், தவறு என்று கண்டபோது, தன் கையையே துணித்துக்கொண்டு தண்டனை ஏற்றான் பொற்கைப் பாண்டியன்.

இப்பாரதப் புண்ணிய பூமிக்கு, குறிப்பாகத் தமிழ் இனத்திற்கு இருந்துவந்த நேர்மைதவறா நெறியுடைமை கூறும் சான்றுகள் பலவுள.

இந்திய நாட்டிலும் மேலைநாடுகள் பலவற்றிலும் துலாக்கோல்-தராசு என்பது நீதியின் சின்னமாகக் கொள்ளப்படுகிறது. மேலை நாட்டினர் அதை, தன் கையில் தராசு ஒன்றை வைத்துக் கொண்டிருக்கும் ஓர் நீதி தேவதையின் பழைய சிலையிலிருந்து பெற்றதாகக் கொள்வர்; ஆனால், நம் நாட்டில், தராசுச் சின்னம் நேரடியாக ஆட்சிச் சட்டத்துடன் இணைப்பு உள்ளது. இதை மேலை நாட்டினரே ஒப்புகின்றனர்:

"The balance is an emblem of Justice in India as well as in Europe. We have recived the idea from the ancient figure of Justice personified with a pair of scales in her hand; but in India it was actually Connected with the administration of the Law."

என்பது அறிஞர் எல்லிஸ் என்பவரின் சொல்லாகும்:

முன் 'இனியவை கூறல்' அதிகாரத்தில், 'வணக்கம் உடையவனாகவும் இன்சொல் வழங்குவோனாகவும் ஆதலே ஒருவனுக்கு அணிகலனாகும்; மற்றைய அணிகள் அணிகள் அல்ல' —(குறள்-95) என்று வள்ளுவர் கூறக் கேட்டோம். அங்கு, பணிவும் இன்சொல்லும் ஒருவனுக்கு அணியென்றவர், இங்கு, ஒருபாற் கோடாமை சான்றோர்க்கு அணி என்று பின்னுஞ் சிறப்பித்துக் கூறக் கேட்கிறோம்!

மேற்கோள் பகுதி:

நடுவு நிலைமை என்பதை விளக்க மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது.

1. இளம்பூரணர்: தொல்காப்பியப் பொருளதிகார உரை— நூற்பா. 75; 256
2. நச்சினார்க்கினியர்: ,, ,, ,, 76
3. சிவஞான முனிவர்: சோமேசர் முதுமொழி வெண்பா, பாடல்; 12
4. சென்ன மல்லையர்: சிவ சிவ வெண்பா, ,, 12
5. வெள்ளியம்பல வாணர்: முதுமொழி மேல் வைப்பு, பாடல், 25

6. யாரோ: திருப்புல்லாணி மாலை. பாடல் 12

ஒப்புமைப் பகுதி:

1. 'செற்றமு முவகையுஞ் செய்யாது காத்து
ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகி"
(மதுரைக் காஞ்சி, 490-491)

2. "தெரிகோன் ஞமன்ன போல வொருதிறம்
பற்ற லியரோ" (புறநானூறு, 6; 9-10)

3. "ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர்கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்" (கலித்தொகை, 42; 14-15)

4. "சீல மல்லன நீக்கிச் செம்பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை" (கம்பர், மந்தரை சூழ்ச்சி-19)

5. "துலைநாவன்ன சமநிலை"—யாரோ.

மொழிபெயர்ப்பு:-

To incline to neither side, but to rest impartial as the even fixed scale is the ornament of the wise.

(R. D) *

## பூமிக்கு பாரம்

புகழ் பெருது இயங்கும் ஒருவனைத் திருவள்ளுவர் ஆண் மகனாகக் கருதாது, பிணமெனக் கருதி, 'இசையிலா யாக்கை' என்ருர், இத்தகைய யாக்கையையுடையோர் பூமிக்குப் பாரமாகவும் சோற்றுக்குக் கேடாகவும் இருப்பர். இவர்களது பாவ யாக்கையைப் பொறுக்கின்ற நிலம், 'வசையிலா வண்பயன் குன்றும்' என்பது திருவள்ளுவர் துணிபு. 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை' என்ற முதுமொழியும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

—கு. மதுரையார்,
"திருவள்ளுவர் இல்லறம்"

# சொற்கோட்டம்...

பேராசிரியர். வ. பெருமாள்,
எம். ஏ. பி. டி. எம். ஆர். ஏ, எஸ்.
முதல்நிலைக் கல்லூரி,
கோலார் தங்கவயல்.

## குறள்-9·

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். 119

[பரிமேலழகர்: நடுவு நிலைமையாவது சொல்லின்கண் கோடுதலில்லாததாம். அஃது அன்னதாவது மனத்தின்கண் கோட்டம் இன்மையைத் திண்ணிதாகப் பெறின்,

சொல்—ஊழான் அறுத்துச் சொல்லுஞ்சொல். காரணம் 'பற்றி ஒருபாற் கோடாத மனத்தோடு கூடுமாயின், அறங்கிடந்தவாறு சொல்லுதல் நடுவு நிலைமையாம். எனவே அதனோடு கூடாதாயின் அவ்வாறு சொல்லுதல் நடுவுநிலையன்று என்பது பெறப்பட்டது.]

கருத்து: சொல்லில் கோணல் இல்லாதிருப்பதே நடுநிலைமை. உள்ளத்தால் கோணல் இல்லாவிட்டால் நடுநிலைமை உறுதியாக ஏற்படும்.

விளக்கம்: மனிதனை முக்கூறுகளாகப் பிரிப்பர் அறிஞர். அவை யாவன; மனம் மொழி, மெய் அவற்றை, மனம், வாக்கு, காயம் என்றும் கூறுவதுண்டு இம் மூன்றும் சேர்ந்து 'திரிகரணம்' எனப்படும். வயலில் விதை வேரூன்றி பயிராக வளர்ந்து நெல்லாக விளைவதைப் போல, மனத்தில் எண்ணம் வேரூன்றி மொழிவாயிலாக வளர்ந்து மெய் வாயிலாகப் பயன் தருகின்றது. விதை நன்றாக இருந்தால்தான் பயிரும் நன்றாக இருக்கும் பயிர் செழித்துவளர்ந்தால்தான் நல்ல அறுவடை கிடைக்கும். அதைப்போலவே உள்ளத்திலவேரூன்றும்கருத்துநேர்மையானதாக இருத்தல் வேண்டும். கருத்தில் சிறிதும கோணல் இல்லாமல் நேர்மையானதாக இருந்தால் சொல் நேர்மையாக இருப்பது உறுதி. மனமும் மொழியும் நேர்மையாக இருக்கும்போது செயல் நேர்மையாகவே இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். இத்தகைய மூந்நிலை நேர்மைக்கு நடுநிலைமை என்று பெயர்.

நடுநிலைமையைச் 'செப்பம்' என்றும். 'செம்மை' என்றும் குறிப்பிடுவதுண்டு. செம்மையுடையவன் 'செம்மல்' என்று குறிக்கப்படுகின்றான்.

இக்குறட்பாவில் 'செப்பம்' என்னும் சொல் செம்மையாக அமைந்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கது.

விருப்பு வெறுப்பின் காரணமா ஒருபக்கம் சாயாமல் நடுநிலைமையில் மனத்தை உறுதியாக நிறுத்தி அதன் அடிப்படையில் வெளிப்படுகின்ற சொல்லும் செயலும் ஒருவனைச் செப்பம் வாய்ந்த செம்மலாக ஆக்கும்.

கோணாத வாழ்வே நேர்மையான வாழ்வு.

* * * *

[நடுநிலைமையின் சிறப்பையும், அவசியத்தையும் பல கோணங்களிலிருந்து எடுத்து விளக்கிப் பத்துக் குறட்பாக்கள் இயற்றிய வள்ளுவர் பெருமான், மனித உள்ளம் நேர்மையாக இருக்க வேண்டியதன் அவசியம்பற்றி மூன்று குறட்பாக்களில் நெஞ்சத்தைக் குறிக்கின்றார். (குறள் 5, 6, 9) உட்கோட்டம் (உள்ளத்தில் கோணல்) இல்லாதிருந்தால் மட்டிலுமே 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாமை பிறக்கும்; உள்ளும் புறமும் ஒக்க இருக்கும். 'நடுநிலைமைத் தன்மை'— என்பதே மனத்தைக் குறித்த பொருள் தான். மனிதனது சொல்லுக்கும் செயலுக்கும் மனந்தான் அடிப்படை. மனம் ஏவுவதைத்தான் நாவு சொல்கிறது; பிற உறுப்புக்கள் செயலில் ஆற்றுகின்றன. மனத்தில் நியாயம் என்று தோன்றும்போது, அந்த நியாயத்தை மறைத்து அநியாயத்தை வாயால் சொல்லும்படி ஏவுவதும் மனமே. எனவே மனச் செம்மை இங்கு வற்புறுத்தப்படுகிறது. இக்குறளில் வரும் 'ஒருதலையா' என்னும் உறுதிச்சொல் சிறப்புடைத்து. —ஆர்.]

மொழி பெயர்ப்பு:-

If the heart does not lean to oneside outright (M. S. P), then equity is the impartial expression of an unbaised mind. (V. R. R) *

## வியந்து புகழ் நூல்

இத்தாலிய அறிஞன் தாந்தே தான் இயற்றிய தெய்விக நாடகம் (DIVINE COMEDY) என்னும் நூல் தன்னைப் பல ஆண்டுகள் தலைகுனியச்செய்து வைத்துவிட்டதாகச் சொல்லிக் கதறிக் கண்ணீர் வடித்துள்ளான். ஆனால் திருவள்ளுவனோ மண்ணும் விண்ணும் உள்ளளவும் எந்த அறிஞனும் எண்ணி எண்ணி வியந்து புகழும் வகையிலன்றோ திருக்குறளை யாத்துள்ளான்.

திரு. சோ. சதாசிவம். "திருவள்ளுவன்"

# வாணிகம் செய்வார்க்கு...

பேராசிரியர், ரா. கிருஷ்ணமூர்த்தி,
எம். ஏ., எல், டி. பி. ஓ. எல்.,
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் கல்லூரி, மதுரை,

## குறள்-10.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் 120

[பரிமேலழகர்:- பிறர் பொருளையும் தம் பொருள் போலப்பேணிச் செய்யின்; வாணிகஞ் செய்வார்க்கு நன்றாய வாணிகமாம்.]

முன்னுரை:- நடுவு நிலைமையாவது பகை, நொதுமல், நண்பென்னும் மூன்று பகுதியினும் அறத்தின் வழுவாது ஒப்பநிற்கும் நிலைமை: நன்றி செய்தார் மாட்டும் அந்நன்றியினை நினைத்தவழி நடுவு நிலைமை சிதையலாகாது. நடு நிலைமையுடையவன் செல்வம் அழியாமல் அவன் சந்ததிக்கும் நின்று உதவும். இவர் நடுவுநிலைமையுடையவர், இவர் நடுவுநிலைமையில்லாதவர் என்பது அவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும். இத்தகைய சிறந்த அறமாகிய நடுவுநிலைமை வாணிகத்திலும் வேண்டப்படுமென்று இக்குறள் கூறுகிறது. பொதுவாக, வாணிகம் என்பது பொய்யும் சூதும் நிறைந்தது என்ற ஒரு கருத்து நிலவி வருகிறதன்றோ? நல்ல வாணிகம் என்பது இக் குறைகள் இல்லாத,நடுவுநிலைமையோடு செய்யப்படும்வாணிகமேயாகும். இவ்வாறு வாணிகம் செய்வார்க்கு வருவாய் பெருகிக் குடியும் தழைக்கும் என்பது ஆன்றோர் கருத்து

பொருள்:- பிறர் பொருளையும் தம் பொருள்போலப் பேணிச்செய்தால், வாணிகம் செய்வார்க்கு அது நல்ல வாணிகமாகும். 'பிறவும் தமபோற் செய்த'லாவது, கொள்வது மிகையும் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நாடிச் செய்தல்.

விளக்கம்:- பட்டினப் பாலையில் 'வேதவாணிகர்' இயல்பு கூறப் படுகிறது. 'நெடுநு கத்துப் பகல்போல், நடுவுநின்ற நன்னெஞ்சினோர், வடுவஞ்சிவாய் மொழிந்து தமவும் பிறவும் ஒப்பநாடிக், கொள்வதூஉ மிகை கொளாது கொடுப்பதூஉங்குறை கொடாது,பல்பண்டம் பகர்ந்து வீசும், தொல்கொண்டித் துவன்றிருக்கைப், பல்லாய் மொடுபழி பழகி'

என்பது காவிரிப்பூம்பட்டினத்து அறவணிகர் இயல்பு கூறப்படுகிறது. இவர்கள், நீண்ட நுகத்தடியின் நடுவில் உள்ள பகலானியைப் போல, நடுவுநிலைமையுடன் நின்ற நல்ல நெஞ்சினையுடையவர்கள், பொய் சொல்வது தம் குடிக்குப் பழியாகும் என்று அஞ்சி உண்மையையே கூறித் தம்பொருளையும் பிறர் பொருளையும் ஒருதன்மையவாகக் கருதித் தாம் கொள்ளும் சரக்கையும் தாம் கொடுக்கும் பொருட்கு மிகையாகக் கொள்ளாது, தாம் கொடுக்கும் சரக்கையும் தாம் வாங்கும் பொருட்குக் குறையாகக் கொடாமல், பல பண்டங்களையும் இலாபத்தை வெளியாகச் சொல்லிக் கொடுக்கும் தன்மையுடையவர்கள். அதனால், மிகத்திரண்ட செல்வத்தையும், பெரிய சுற்றத்தையும் உடையவர்களாய் அவ்வூரில் மிகப் பழங்காலந்தொட்டு இருக்கைகொண்டு வாழ்பவர்கள்.

தொல்காப்பிய அகத்திணையியல் சூத்திரம் 28-க்கு நச்சினார்க்கினியர் கூறியுள்ள உரையில், "வணிகர்க்கு உரிய விரதமாவன, கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது பலபண்டம் பகர்ந் தீதல் முதலியன" என்பர்.

இத்தகைய அறத்தோடு பொருந்திய வாணிகத்தை மேற்கொண்டொழுகினால் இக்காலத்தில் இத்தொழிலுக்குப் பரவலாக ஏற்பட்டுள்ள தீய பெயர் மறைவது உறுதி இதையே வள்ளுவர் வாய்மொழி நமக்கு நயமாக எடுத்துக்காட்டி, இதினின்று தவறுவது, முதலில் ஒருகால், மிகுந்த செல்வத்தைத் தரினும், பிறகு 'உள்ளது போலக் கெடும்' என்ற எச்சரிக்கையையும் விடுக்கிறது.

மேற்கோள் பகுதி:- வணிகருக்கும் வேளாளருக்கும் பொதுவாகிய வாணிகத்தின் சிறப்புக்கு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது

1. நச்சினார்க்கினியர்:- தொல்காப்பிதப் பொருளதிகார உரை நூற்பா —75

ஒப்புமைப் பகுதி:-

1. "நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறை கொடாது"
பல்பண்டம் பகர்ந்து .." பட்டினப்பாலை 206, 211.

2. "...பிறர் பொருளுந்
தமபோற் பேணிப் புரிவணிகர்"
—பிரபுலிங்கலீலை; மாயையின் உற்பத்திகதி—15

3. "கொடுப்பது குறையின்றிக் கொள்வது மிகையின்றி
...வணிகர்கண் மற்றறியார்"
—விநாயக புராணம்-நகர. 88

மொழி பெயர்ப்பு:-

To one who trades, it will be good trade if he takes good care of other's goods as he does for his own.

(M. S. P.) •

---

மதிப்புரை.

## தமிழ் ஏடுகள் வழிகாட்டி.

தொகுப்பாளர், திரு. க. பட்டாபிராமன். பக்கங்கள் 74. கிடைக்குமிடம்; க. பட்டாபிராமன், செருவா விடுதி, பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சை மாவட்டம். விலை 75 காசு.

திரு. க. பட்டாபிராமன் தமிழ் மொழியில் வெளியாகும் பத்திரிகைகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து, 26—11—65 முதல் 30—11—65 வரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மிகச்சிறப்பாகக் கண்காட்சி நடத்தி, அறிஞர் பலருடைய பாராட்டுரைகளைப் பெற்றவர். அக் கண்காட்சியை யொட்டி இந்நூல் வெளியிடப்பட்டது. தமிழ் மொழியில் வெளியாகும், ஏறக்குறைய 650 பத்திரிகைகளின் பெயர், ஆசிரியர் பெயர், காலமுறை, விலை, முகவரி முதலிய விவரங்கள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைப் பெயர்கள் யாவும் பல்வேறு தலைப்புக்களில் தரப்பட்டுள்ளன. தமிழகத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகளைத் தவிர, இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலிருந்தும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளிலிருந்தும் வெளியாகும் தமிழ் ஏடுகளின் விபரங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இந்நூல் பத்திரிகை யுலகத்திற்கு நல்ல வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. தொகுப்பாசிரியரின் பெருமுயற்சி பாராட்டிற்குரியது.

—பேராசிரியர், வ. பெருமாள்.

---

குறள்நெறிப்பாடல்,

# நடுவுநிலைமை தவறாதே.

(ஆசிரியர், ப. கண்ணன்)

இராகம்-அடாணா. தாளம்-ரூபகம்,

எடுப்பு.

நடுவு நிலைமை தவறாதே-எந்த
நாளிலும் எந்த நிலையிலும் மனமே—நீ (நடு)

தொடுப்பு.

கெடுதலும் நலம்வருதலும் வாழ்வின் இயல்பே
கேவலமில்லை வறுமை வரினும்
நீதியுளது நலமாம் உலகில் (நடு)

படுப்பு.

தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தால் காணப்படும்.

முடிப்பு.

மிக்கச்சமன் செய்துவைத்த துலாக்கோல்போலே
மறுபுறமதில் சாய்ந்து கெடாது
பெறுநிலையதில் சோர்ந்து விடாது. (நடு)

சந்தம்.

செப்பமெனும் நடுநிலைமை எப்பொழும் பெருமைதரும்
ஒப்பிடுமேவுல கமதும் ஓங்கிடுமே நினதுபுகழ். (நடு)

வாணிக முறையிலும் நடுநிலை பேணிடுவாய்-கணம்
காணிடு பிறர்பொருள் கருதிடல் தீவினையாம்-பெரும்
நன்மைபல செய்திடினும் புன்மைநிலைகண்டு
உண்மையுள நெறியதனை வன்மையுடன் கொண்டுநீ.(நடு)

அரியதோர் வாய்ப்பு!

# திருக்குறள் பாயிரப்பத்து.

## (பாயிரம் முதல் பத்து அதிகாரங்கள் முடிய)

- ஓரதிகாரத்தின் பத்துக் குறட்பாக்களுக்கும் பத்து பேரறிஞர்கள் தரும் தெளிவுரை மணத்துடன் மலரும். குறள் மலரைத் தொடக்க முதல் படிக்கவிரும்பி, முன் மலர்கள் கேட்கும் அன்பர்கள் அநேகர்.

- பத்து குறட்பாக்களைப் பத்துக் கோணங்களிலிருந்து நோக்கி அற நெறி பகரும் வள்ளுவர் பெருமானின் உள்ளக்கிடக்கையை உற்று நோக்கி, ஆராய்ந்து தற்காலத் தமிழ்ப் பேரறிஞர்கள் பதின்மரின் உள்ளத்தே மலர்ந்த புதிய கருத்துக்களைப் போற்றிப் புகழும் அன்பர்களும் பலர்.

- இவர்கள் அனைவரின் விழைவையும் நிறைவேற்றும் வகையில், அறத்துப்பாலின் 'கடவுள் வாழ்த்து' முதல் 'இனியவை கூறல்' வரை மலர்ந்துள்ள பத்து மலர்களின் புதிய தொகுப்பாக;

- நூறு பாக்களுக்கும் நூறு அறிஞர்கள் ஏற்கனவே தந்துள்ள தெளிவுரையுடன், வள்ளுவர் காலத்திற்குப்பின் இதுவரை வெளிவந்துள்ள வேறு பலநூல்களிலிருந்து மேற்கோள் பகுதிகள், ஒப்புமைப் பகுதிகள், குறள் மட்டுமேயன்றி குறள் கருத்துக்கள் எடுத்தாளப்பட்டுள்ள விவரம் ஆகியவற்றை ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களை ஆராய்ந்து திரட்டிய அருஞ்சுவைப் பகுதிகளும், ஆங்கில மொழிபெயர்ப்பும், பரிமேலழகர் மட்டுமேயன்றி குறளுக்கு உரை செய்துள்ள பழைய உரையாசிரியர் பலரின் உரைகளும் கொண்டு வெளிவருகின்ற அரிய நூல்.

- உரை ஒற்றுமைப் பகுதிகளேயன்றி உரை வேற்றுமைப் பகுதிகளும் நூலில் இடம் பெறுகின்றன.

- இத்தனை சிறப்பான முறையில் உபயோககரமான ஒரு நூல் வெளிவருவது இதுவே முதல் முறை.

- விலை விவரம் பின்னர் வரும். தேவைப்படும் அன்பர்களும், விற்பனையாளர்களும் முன்கூட்டியே அறிவிக்கவேண்டுகிறோம்.

- தேவைக்குத் தகுந்த குறைந்த எண்ணிக்கையிலேயே நூல் அச்சிடப்படும்.

ஆசிரியர்,
'குறள் மலர்'

# குறள் மலர்

## குறள் அறம் பரப்ப வாரீர்!
## அறம் வளர்ப்போர் அணி!

★ புரவலர்.

உருபா 500-ம் அதற்கதிகமாகவும் மலருக்கு அன்பளிப்பாக மனமுவந்து வழங்கும் புரவலர்கள், இத்தொகையை மொத்தமாக அன்றி 5 தவணைகளில் வழங்கலாம்.

★ பேராதரவாளர்:

உருபா 100 ஆயுள் கட்டணமாக வழங்கிப் பேராதரவாளராகி திருக்குறள் முழுவதுமான 133 அதிகார மலர்களையும் திங்கள் ஒன்றுக்கு 5 மலர்கள் பெற்று நண்பர், மாணவர்க்கு அன்பளிப்பாக ஈந்து, கல்வி அறமும் குறள் நெறியும் வளர்க்கலாம்.

★ ஆதரவாளர்:

திங்கள் ஒன்றுக்கு ஒரு உருபா வழங்கி 5 மலர்கள் பெற்றுத் தாமும் மகிழ்ந்து, நண்பர்கட்கும் அன்பளிப்பாகத் தந்து, மற்றவர்களை மகிழ்வித்தோர் ஆதரவாளர், (ஆண்டுக் கட்டணமானால் உருபா 10- போதும்)

★ உறுப்பினர்.

ஆண்டுக் கட்டணமாக உருபா 3-மட்டும் வழங்கித் திங்கள் தோறும் ஒரு மலர் பெறுவோர் உறுப்பினர்.

இந் நால்வகைகளில் தங்கள் விழைவிற்கேற்ப எவ்வகையிலேனும் "குறள் மல"ருக்கு ஆதரவு தந்து குறளறம் பேண மனமுவந்து அன்பர்கள் முன்வருக...

ஆசிரியர்,
"குறள் மலர்"
உரிகம் அஞ்சல்,
கோலார் தங்கவயல்.
(மைசூர் மாநிலம்)

செந்தமிழ் அச்சகம், சங்ககிரி... (சேலம் மாவட்டம்)